தாய்மொழி — தமிழ்

# மொழி என்பது என்ன?



1211101

ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி

**தயாரிப்புக் குழு**

எச். ஜீ. சி. ஏ. ரீ. ஜயசேகரா
ஏ. எம். எஸ். அபயக்கோன்
இரா சுந்தரலிங்கம்
ம. செ. அலெக்சாந்தர்
வே. சுப்பிரமணியம் (முல்லைமணி)
க. சொக்கலிங்கம் (சொக்கன்)
கே. நடேசன்
எஸ். சோதிப்பெருமாள்
முருகு இரத்தினம்
ஏ. சிவராஜா

# மொழி என்பது என்ன?

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| ஆரம்பபாடநெறி | 12 |
| தாய்மொழி தமிழ் | 1211 |
| மொழி என்பது என்ன ? | 121101 |

**உள்ளடக்கம்** **பக்கங்கள்**


| | | |
|---|---|---|
| 0.0 | அறிமுகம் | 3 |
| 1.0 | குறிக்கோள்கள் | 6 |
| | பகுதி I | |
| 2.0 | மொழி என்பது கருத்துத் தரும் ஒலியையும், வரிவடிவையும் கொண்டது. | 7 |
| 3.0 | மனிதனின் மிகச் சிறந்த படைப்பு மொழி. | 9 |
| | பகுதி II | |
| 4.0 | மொழியானது கருத்துத் தொடர்புறுத்தும் ஊடகம் | 11 |
| | பகுதி III | |
| 5.0 | மொழி சிந்தனையின் முதன்மையான கருவி | 14 |
| | பகுதி IV | |
| 6.0 | மொழி பண்பாட்டினை வெளிப்படுத்தும். | 16 |
| 7.0 | பொழிப்பு | 16 |
| 8.0 | பிற் சோதனை | 17 |
| 9.0 | ஒப்படைகள். | 18 |
| 10.0 | உசாத்துணை நூல்கள். | 18 |
| 11.0 | விடைகள் | 18 |


© 1990 கல்வி அமைச்சு

வெளியீடு 1.2

## 0.0 அறிமுகம்

எந்தப் பாடத்தினைப் படிப்பிப்பதற்கும் மாணவருக்குத் தாய் மொழி அறிவு அவசியமாகும். ஆதலால் ஆரம்ப பாடசாலையில் தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களாகிய உங்களின் பொறுப்பு மிக முக்கியமானதாகும்.

மொழியின் அடிப்படைத் திறன்களை ஒரு பிள்ளை தனது வீட்டிலேயே கற்றுக்கொள்கின்றது. மொழியின் நான்கு திறன்களுள் கேட்டல், பேசுதல் என்ற இரண்டினையும் அது ஓரளவு வீட்டிலேயே பெற்றுக்கொள்கிறது. வாசித்தல், எழுதுதல் ஆகிய மொழித் திறன்களையும் ஒழுங்குபடுத்திச் சிறப்பாகப் பெறுவதற்கு உரிய இடம் பாடசாலையே. எனவே இவற்றிற்கான சூழலைப் பாடசாலையில் ஆக்குவதே ஆசிரியரின் முதன்மையான கடமை.

இங்கு அறிமுகமாகும் கற்கை நெறியானது தமிழ் மொழியின் ஆரம்பக் கல்விப் பயிற்சிநெறியினை ஆதாரமாகக் கொண்டது. இந்த நெறியின் நோக்கம் உங்களின் மொழியாற்றலை அபிவிருத்தி செய்ய உதவுவதோடு தமிழ் மொழியைக் கற்பிக்கும் அறிவையும் திறனையும் உங்களிடையே வளர்த்தலுமாகும்.

இந்த இலக்கினை அடைவதற்கென எழுதப்படும் தொடர்ச்சியான மொடியூல்களில் **(Modules)** இதுவே முதலாவதாகும்.

### செயற்பாடு 1

கீழே தரப்படும் இரு வினாக்களை ஆசிரியர்களாயுள்ள ஐவருக்கோ அல்லது உயர்தர வகுப்பு மாணவர் (க.பொ.த.உ.த,) ஐவருக்கோ கொடுத்து அவர்கள் தரும் விடைகளைத் தனித்தனியே பெறுக.

1. தண்ணீர் என்பது என்ன ?
2. மொழி என்பது என்ன ?

விடைகளைக் கீழேயுள்ள கோடுகளில் எழுதுக.

1. தண்ணீர் என்பது

1 ......................................................................
2 ......................................................................
3 ......................................................................
4 ......................................................................
5 ......................................................................

2 மொழி என்பது

1 ......................................................................
2 ......................................................................
3 ......................................................................
4 ......................................................................
5 ......................................................................

'தண்ணீர்' தொடர்பாக எல்லோரினதும விடைகள் ஒரே மாதிரியானவையா!

'மொழி' தொடர்பான விடைகளும் ஒரே மாதிரியானவையா ?

'தண்ணீர்' என்பதற்கும் 'மொழி' என்பதற்கும் தரப்பட்ட விடைகள் ஒரே மாதிரியானவையல்ல என்பதை விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இவ்வாறான வேறுபட்ட விடைகள் கிடைத்தமைக்கான காரணம் யாது ? விடைகள் ஒரேமாதிரி இல்லாமை ஏன்?

## தண்ணீர் காட்சிப்பொருள்

தண்ணீரை நீங்கள் தொட்டுப் பார்க்கலாம். பாயும் நீரின் ஓசையைக்கேட்கலாம். பாயும் காட்சியைக் காணலாம், உணரலாம். ஐம்புலன்களாலும் அறியக்கூடிய பொருட்கள் காட்சிப்பொருட்களாகும்.

மொழி கருத்து நிலை எண்ணக்கருவாகும். ஐம்புலன்களாலும் அறியக்கூடிய காட்சிப்பொருளாகிய நீர் பற்றிய வினாக்களுக்குப் பல்வேறு விவரணங்கள் விடைகளாகக் கிடைத்தன.

மொழியைத் தொடவோ அன்றேல் நாவால் சுவைக்கவோ முடியாது. ஆனால் அதனைப் பேசும்போது கேட்கவும், எழுதும் பொழுது பார்க்கவும் முடியும். ஆகவே

## மொழி – கருத்துநிலை எண்ணக்கரு

ஐம்புலன்களால் அறியப்படும் பொருட்களும் அறியமுடியாத பொருட்களும் சுற்றாடலில் உண்டு. இவற்றிற்கு ஒரே மாதிரியான விவரணத்தைக் கொடுத்தல் இயலாது என்பதை மேலேயுள்ள உதாரணங்கள் மூலம் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.
மொழி என்பது என்ன எனப் பல்வேறு விவரணங்களை மொழியியலார் கூறியுள்ளனர். அவர்களின் கூற்றுக்களிற் சிலவற்றைக் கீழே தருகின்றோம்.


1 பரந்த நோக்கில் அணுகினால் மனிதனை முதலாகக் கொண்ட எல்லாச் சீவராசிகளும் தங்களது உணர்வுகளையும் கருத்துகளையும் பரிமாற்றும் எந்த முறையும் மொழியாகும்.

2 மனிதர் தமக்குள்ளே கருத்துக்களையும், உணர்வினையும் தொடர்புறுத்தும் முறைமையே மொழியாகும்.

3 ஒலி வரிவடிவங்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பே மொழியாகும்.

முதலாவது மனிதர் உட்படச் சகல சீவராசிகளும் தங்கள் கருத்துக்களையும் உணர்வுகளையும் தொடர்புறுத்தும் முறை (பரிமாறும் முறை) மொழியாகும். மிருகங்களும் தமக்கிடையே தொடர்புறுத்தலை நிகழ்த்துகின்றன. இது சத்தங்களுடனும் முகபாவனையுடனும் நின்றுவிடும்.

மொழியியலாளர் சிலர் இம்முறைகளையும் மொழியென்பர். ஆனால் எண்ணங்களை வெளிப்படுத்தித் தொடர்புறுத்தும் ஆற்றல் மனிதனைத் தவிர்ந்த ஏனைய சீவராசிகளுக்கு இல்லை. மிருகங்கள் சாதாரண அறிகுறிகளால் தமதுணர்வை வெளிப்படுத்தும். இந்தச் சாதாரண அறிகுறிகள் மொழியாகக் கருதப்படுவதில்லை.




சைகை மொழிமூலம் சிலவேளைகளில் கருத்துப் பரிமாற்றப்படுகிறது

ஒழுங்கு அமைப்புள்ள மொழி ஏற்படுமுன் **ஆரம்பத்தில்** சைகை முறையில் தொடர்புறுத்தல் நிகழ்ந்தது. இன்று மொழி வளர்ந்த நிலையிலும் சைகை மொழி பயன்படுகிறது. சைகை முறையில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களையும், ஆழ்ந்த கருத்துக்களையும் தெளிவுறப் பரிமாறல் இயலாது. மொழி மூலம் தொடர்புறுத்துவதோடு, சைகை முறையும், அரங்குகளில் நாட்டியம், நாடகம் ஆகியவற்றில் பிரயோகித்துத் தொடர்புறுத்தப்படுகிறது. சைகை மொழி, மொழியின் சில தொழிற்பாட்டுக்காக தொடர்புறுத்துவதற்குப் பயன்படுத்த முடிந்தாலும், அது பூரணமான மொழியாகாது.

இரண்டாவது மொழியின் விவரணத்தை எடுத்துக்கொள்வோம். இது மனிதனின் மொழியை மட்டும் கருத்திலே கொள்ளச் செய்கிறது. அதனோடு சைகை அடையாளங்கள் ஆகியவற்றையும் இது மொழியாகக் கருதுகிறது. சைகையும், அடையாளங்களும் மொழிக்கு உதவும் முறைகளாக இருந்தாலும் இவை பூரண மொழியாகாது.

மூன்றாவது விவரணத்தைக் கவனிப்போம். ஒலி வரிவடிவங்களின் (எழுத்துருவம்) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பே மொழியாகும் ஒழுங்குபடுத்தப்பட்டதென்பது ஒரு மொழியின் இலக்கண ஒழுங்கு முறையைக் கருதுகிறது. இந்த விவரணங்கள் ஒலி அடையாளங்களை மட்டுமே கருதுகின்றன. ஆதலினால் இவ் விவரணமும் பூரணமற்றது. உலகிலே பேச்சு மொழிகள் இருக்கின்றன. உதாரணம்:- வேடர்களின் மொழி. நாகரிகத்தின் **வளர்ச்சியுடனேயே** வாசித்தலும், எழுதுதலும் மொழியோடு சேர்ந்தன.




இன்று வளர்ச்சியடைந்த மொழியில், மொழியின் நாலு திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் அடங்கி யுள்ளன. ஆதலினால் மூன்றாவது விவரணத்தையும் பூரண மான விவரணமாகக் கொள்ளல் இயலாது.

ஆகவே எல்லாரும் ஏற்கக்கூடிய இதுதான் சரியான விவரணம் என மொழிக்கு ஒரு விவரணம் கொடுத்தல் இயலாது. ஆனால் உங்களுக்கு மொழி என்றால் என்ன என்பது தெரியும்.

பின்வரும் விவரணங்கள், "மொழி என்றால் என்ன?" என விளங்குவதற்கு ஏற்றதாகும் எனக் கருதுகிறேன்.

- ✶ மொழி என்பது கருத்துக்களினதும் ஒலிகளினதும் வடிவங்களினதும் ஒழுங்கமைப்பாகும்.
- ✶ மனித வரலாற்றுக் கண்டுபிடிப்புக்களில் மிகச் சிறந்தது மொழியாகும்.
- ✶ மனிதன் தொடர்புறுத்தல் (கருத்துப் பரிமாற்றம்) செய்யும் ஊடகம் மொழி.
- ✶ சிந்தனைக்குச் சிறந்த முதன்மை ஊடகம் மொழி.
- ✶ மொழி, பண்பாட்டை வளர்க்கின்றது.

இவைகளைத் தனித்தனியாகப் பின் நோக்குவோம்.

## 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூலைக் கற்பதனால் பின்வரும் குறிக்கோள்களை அடையலாம்.

1.1 மொழி என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்வது.

1.2 மொழியை மிகப் பயன் தரக்கூடியவாறு பயன்படுத்தும் திறனை மேம்படுத்திக் கொள்ளல்.

1.3 சிந்தனை ஆற்றலை வளர்த்தல்.

1.4 மொழியைத் திறம்படப் பிழையின்றிப் பாவிக்கும் ஆற்றலை வளர்த்தல்.

1.5 மொழியைக் கலாசார விழுமியங்களுக்கும், பண்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் பயன்படுத்தல்.

## செவ்வைபார்த்தல் 1

பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் எதிரே உள்ள சதுரத்தில் இடுக.

1 மொழி ஒரு கருத்து நிலை ஏண்ணக்கரு ☐

2 மனிதனையும், மிருகத்தையும் வித்தியாசப்படுத்துவது மொழியாகும். ☐

3 மொழிச் செயற்பாடுகளை நான்கு முக்கிய பகுதிகளாகப் பிரித்துக் காட்டலாம். ☐

4 மிருகங்களிடம் எண்ணங்களை உருவாக்கும் திறன்கள் இல்லை ☐

5 பிள்ளையின் முதலாவது மொழி அனுபவத்திறன் பேச்சாகும். ☐

6 ஒலிகளினதும், வரிவடிவங்களினதும் அமைப்புடையது மொழி. ☐

7 சைகை மூலம் கருத்துப் பரிமாற்றம் செய்யலாம். ☐

8 வளர்ச்சியடைந்த மொழியிலே இலக்கியம் இருக்கலாம். ☐

9 தொடர்புறச் செய்யும் முக்கிய கருவியே மொழி.

10 மனிதன் ஆக்கிய படைப்புக்களில் முக்கியமானது மொழியாகும். ☐

11 பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் கண்ணுடி மொழியாகும். ☐

12 மொழி இதுதான் என எல்லாரும் ஏற்கும் விவரணம் எதுவும் இல்லை. ☐

இம்மொடியூலின் பின்னே தரப்பட்ட சரியான விடைகளோடு உமது விடைகளை ஒப்பிட்டறிக. விடைகள் பிழைத்தால், மீண்டும் இப் பகுதியை வாசித்துத் திருத்துக.

## பகுதி I

## 2.0 மொழி என்பது கருத்துத் தரும் ஒலியையும் வரிவடிவையும் கொண்டது.

மொழியிலே நான்கு திறன்கள் உண்டு. அவையாவன (1) கேட்டல் (2) பேசுதல் (3) வாசித்தல் (4) எழுதுதல் கேட்டலும் பேசுதலும் வளர்ந்தனவும், வளராதனவுமான மொழிகளிலும் உண்டு. பேசும்போது, ஒலி எழுப்பும் வாயோடு சேர்ந்த உறுப்புக்களை உபயோகிக்கிறோம்.

இந்த உறுப்புகளால் எல்லையற்ற பல்வேறு ஒலிகளை எழுப்பலாம். நாங்கள் பேசும்போது தொண்டை, அண்ணம், பல், உதடு ஆகிய ஒலி ஏற்படுத்தும், உறுப்புக்களைப் பாவிக்கிறோம். சில ஓசைகளை வெளிப்படுத்துகிறோம். அவ்வுறுப்புக்களின் ஒலிகள் அளவிறந்தவை

தயவுசெய்து பின்வரும் எழுத்துக்களின் உச்சரிப்பைக் கூறுக: ல, ள, ழ, ன, ண, ந, ன், ண்

ர, ற ப, வ ந், ன்

எழுத்துக்களை கருத்து விளங்கும்படி அமைத்தல் நீண்டகால உபயோகத்தால் ஏற்பட்ட ஒன்றாகும்.

| | ஆரம்ப ஒலிகள் | ஒழுங்குபடுத்தல் | மொழி உபயோகம். |
|---|---|---|---|
| 1ஆம் உதாரணம் | னி இ பு ப் | இ னி ப் பு | இனிப்பு |
| 2ஆம் உதாரணம் | வு த க | க த வு | கதவு |
| 3ம் உதாரணம் | கைதி<br>கை தி<br>தி கை | மதுரை<br>ம து<br>து ரை<br>ம ரை | பாதிரி<br>பா தி<br>தி ரி<br>பா ரி |

இவற்றை ஒழுங்குற அமைப்பதால் கருத்துள்ள சொல் உருவாகும்.

பேச்சு மொழி, ஒழுங்காக அடுக்கப்பட்ட ஒலிகள் கருத்துத் தரும் போது சொல்லாகி விளங்க வழி வகுக்கிறது.

தனிப்பட்ட சொற்கள் ஒழுங்காக அமைக்கப்படாத இடத்து தனியே நின்று பூரண விளக்கத்தை அளிக்காத சொற்கள் கருத்துத் தரும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டால் பூரண விளக்கம் தரும்.

அமைப்பற்ற சொற்கள்.

| | | |
|---|---|---|
| பாடுகிறாள் | அம்மா | பாட்டு |

அமைப்புள்ளவை

| | | |
|---|---|---|
| அம்மா | பாட்டுப் | பாடுகிறாள் |

| | | | | |
|---|---|---|---|---|
| பாலும் | கொடுக்கிறாள் | அம்மா | பழமும் | குழந்தைக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| அம்மா | பாலும் | பழமும் | குழந்தைக்குக் | கொடுக்கிறாள் |

பேச்சு மொழி, மொழியின் எல்லாச் செயற்பாடுகளையும் நிறைவு செய்ய முடியாதபடியால் எழுத்து மொழி உருவானது.

எழுத்து மொழி கேட்பவர் முன்னாலே இல்லாதவிடத்துப் பயன்படுகிறது இங்கு பேச்சு மொழி (ஒலி) தவிர்க்கப்பட்டு, எழுத்து மொழி பயன்படுகிறது. இங்கு சொல்வடிவம் வரிவடிவில் எழுதப்படுகிறது. முதலாவது உதாரணத்தில் தரப்பட்ட எழுத்துக்கள் ஒலிகளைத் தருகின்றன.

## 3.0 மனிதனின் மிகச் சிறந்த படைப்பு மொழி

மொழியை ஆக்கிய பெருமையும், அதனை அபிவிருத்தி செய்த பெருமையும் மனிதனுக்குரியன. அவன் ஒலிகளுக்கு வரிவடிவம் கொடுத்து அதனை ஒழுங்குற அமைத்து, கருத்து விளங்க உருவாக்கி வளர்ச்சி அளித்துள்ளான். மொழித் திறன் மனிதனுக்குக் கிடைத்துள்ள பிறப்புரிமையாகும். மனிதன் சூழலை வென்று நுண்மதியாலும், உச்சரிக்கும் உறுப்புத்திறனாலும், மற்றைய சீவராசிகளை விட விரைவில் மொழித் திறன்களைப் பெறுகிறான். ஐம்புலக் குறைபாடுகள் இல்லாத மொழித் திறனகளை இலகுவில் கற்கும் பிள்ளைக்கு, மொழி ஆற்றல் பிறப்புரிமையானது பிறப்புரிமையால் மொழித் திறன்கள் கிடைப்பினும் சுற்றாடலே, மொழித் திறன்களை வளர்ச்சியடையச் செய்கின்றது. இதைப்பற்றிய பூரண விளக்கத்தைப் பெற 121102 மொடியூலைப் **(Module)** பார்க்கலாம்.

மொழித் திறன்களை வளர்ப்பதற்குப் போதிய சமூக, கல்விச் சூழல் எம்மிடமிருப்பதால் மொழிச் செயல்களில் திறமை பெறுவது இலகுவாகும். புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், ஆன்மீக அபிவிருத்திகளும் உயர்ந்த முன்னேற்றம் பெற வழிவகுத்த சமூக, சமய உணர்வுகளும் மொழியால் கிடைத்த பெருவெற்றிகளாகும். உலக தத்துவ ஞானிகள் தம் கருத்துக்களை மொழியின் உதவியாலேயே உலகிலே நிலவச் செய்கின்றனர். ஆதலின் கற்பித்தலுக்கு மொழியே அத்தியாவசிய கருவியாகும்.

உலக மக்கள் பல்வேறு இடங்களில், பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்வதால், மொழிகள் வேறுபடுகின்றன. இன்றைய உலகில் வழங்கும் மொழிகள் எண்ணிக்கையில் ஏறக்குறையப் பத்தாயிரம் எனக் கூறுவர். அந்த மொழிகளின் சிறப்புக்கள் தொடர்பு கொள்ளுதலும் உணர்ச்சி வெளியீடும் அவற்றின் பாதுகாப்பாகும் மனித வரலாற்றில், மனிதனின் சிறந்த படைப்பு மொழியாகும். சகல ஆக்கங்களுக்கும் மொழியே அத்திவாரமானது. இவ்வூடகம் இன்றி எதுவும் ஆற்றல் இயலாது.

| |
|---|
| மொழியானது சொற்களும், வாக்கியங்களும், உள்ளடங்கியுள்ள ஒழுங்குபடுத்தப் பட்ட கருத்துத் தரும் அமைப்பென்பதும், அது மனிதனால் படைக்கப்பட்ட மிகச் சிறந்த கருவி என்பதும் தெளிவாகின்றது. |

## செயற்பாடு 2

பின்வருவனவற்றைக் கருத்துத் தருமாறு ஒழுங்குபடுத்தி எழுதுக

| | | |
|---|---|---|
| 1 | ம் பா ல | |
| 2 | ர் சி ரி ஆ ய | |
| 3 | மொ ய் தா ழி | |
| 4 | று ரெ வ லி யா | |
| 5 | வி ய வ சா ம் | |

கீழ் வருவனவற்றில் இடம் மாறியிருக்கும் சொற்களை ஒழுங்கு படுத்தி வாக்கியமாக்குக.

6 ஆனால்/நாலு/கேட்டல்/வாசித்தல்/பேசுதல்/எழுதுதல்/ மொழித் திறன்கள்

7 பேச்சுமொழி/என்ற/முன்னேற்றமடைந்த/இரண்டும்/ மக்களி டைவே/எழுத்துமொழி/உண்டு

8 சிறந்த கருவி/கற்பித்தலுக்கு/ஆகும்/மொழி

9 பல்வேறு இனங்கள்/பல்வேறு மொழிகள்/இருப்பதால்/உளர்/ பேசுபவர்

10 நீண்டகாலப் பாவனையால்/ஏற்பட்டது/கருத்து/சில ஒலிகளுக்கும் (சரியான விடை இறுதியிலே உண்டு)

## செவ்வை பார்த்தல் 2

கீழ்க்காணும் கூற்றுக்கள் சரியாயின் (✓) என்றும் பிழையாயின் (X) என்றும் சதுரத்தில் இடுக.

1 மனிதன் **தனது** அவயவங்களால் ஏற்படுத்தக் கூடிய ஒலிகள் மிக அதிகம் ஆகும். ☐

2 நீண்டகால உபயோகம் சொற்களின் கருத்தை நிலைநாட்டுகிறது. ☐

3 மொழி என்பது சில சொற்களையும், சில வாக்கிய அமைப்புகளையும் கொண்டது. ☐

4 உருவங்களைக் கண்ணால் காணலாம். ☐

5 வளர்ந்த மொழிகள் எல்லாவற்றிலும் வரிவடிவுண்டு, ☐

6 மொழி வளர்ச்சிக்குச் சூழல் முக்கிய காரணியாகும். ☐

7 இரு மொழிகளை மட்டுமே மனிதனாற் கற்க முடியும் ☐

8 உலகத்தில் பல மொழிகள் உருவாகக் காரணம் சுற்றாடலின் வெவ்வேறு தன்மைகளாகும். ☐

9 எழுதுவதற்குப் பயன்படும் அடையாளங்கள் எழுத்துக்களாகும். ☐

10 மொழிக்கும் கற்பித்தலுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு ☐

இம்மொடியூலின் பின்னே தரப்பட்ட சரியான விடைகளோடு உமது விடைகளை ஒப்பிட்டறிக. விடைகள் பிழைத்தால், மீண்டும் இப்பகுதியை வாசித்துத் திருத்துக.

## பகுதி II

## 4.0 மொழியானது கருத்துத் தொடர்புறுத்தும் ஊடகம்


மொழி மட்டும்தான் கருத்துக்களையும், மனப்பாங்குகளையும் தொடர்புபடுத்த (பரிமாற) வல்ல சாதனங்களுள் மிகுந்த ஆற்றலும் பொதுமையும் வாய்ந்ததோர் ஊடகமாகும். இதன் செயலொழுங்கு தொடர்புறுத்தல் **எனப்படும்.** உறறேல்ட் லெஸ்வெல் தொடர்புறுத்தலைப் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கிறார். "ஒருவர் சில கருத்துக்களைத் தனது தேவை நோக்கி ஏதாவது ஓர் ஊடகத்தின் மூலம் வெளிப்படுத்துவதே கருத்துத் தொடர்புறுத்தலாகும்."

இதனை ஓர் உதாரண வாயிலாக ஆராய்வோம். பசிகொண்ட ஒரு பிள்ளை தனது தேவையை நிறைவு செய்ய "அம்மா, எனக்குப் பசிக்கிறது" என்கிறது. இக்கூற்று ஒருவகைத் தொடர்புறுத்தலாகும். லெஸ்வெல் அவர்களின் கருத்துப்படி மொழியின் ஊடாக மட்டுமே தொடர்புறுத்தல் நிகழ்வதில்லை. அபிநயம், சைகை, படம், மாதிரி உருவம் முதலியவற்றாலும் அது நிகழலாம். குறியீடுகளான "றடார்க்" குறிகாட்டிகள், பல நிற மின்குமிழ் ஒளிகள், வீதிக் குறிகாட்டிகள் என்பனவும் மாற்றுத் தொடர்புறு சாதனங்களாகப் பயன்படுத்தப்படலாம். ஆனால் இவை மிகுதியும் பயன்படுவன அல்ல. இவற்றுள் எவையும் மொழியினைப் போன்ற ஆற்றலோ, பொதுமையோ கொண்டவையல்ல.

மிகவும் கூடிய வாய்ப்புக் கொண்ட தொடர்புறுத்தும் ஊடகம் மொழியேயாகும். பஸ் தரிப்புநிலையம், சந்தை, பாடசாலை, அலுவலகம், வீடுகள், பண்ணைகள் முதலிய பல இடங்களிலும் மொழியே மிகவும் எளிதாகக் கையாளப்படுகின்றது. இங்கெல்லாம் பேச்சு முதன்மையான இடத்தை வகிக்கின்றது.

வெற்றி நிறைந்த சமூக வாழ்விற்கு மொழி மிகவும் அவசியமானது. சமூகங்களுக்கிடையிலான உறவுப் பிணைப்பினை வளர்க்க உதவுவதும் மொழியே. பொருள் விளக்கம், பங்குகொள்ளல், அறிவு வளர்ச்சி யாவும் மொழியிலேயே தங்கியுள்ளன. கல்விசார் செயற்பாடுகளான வினவுதல், கலந்துரையாடல், உரையாற்றல், கருத்தை வெளிப்படுத்தல், பிரச்சினைகளைத் தர்க்கித்துத் தீர்வு காணல், விவாதித்தல், எழுதுதல், வாசித்தல் என்ற யாவிலும் மொழியானது முதன்மையான இடத்தை வகிப்பதை நீங்கள் அறிவீர்கள்.

இன்று தொடர்புறுத்தலுக்குப் பல வழிகளும், சாதனங்களும் உள்ளன. நூல்கள், வானொலி, தொலைக்காட்சி செய்தித்தாள்கள் என்பன இவற்றுட் சிலவாகும். இவைமூலம் தொடர்புறுத்தல், நிகழ்கின்றது. இச்சாதனங்கள் அறிவையும், தகவல்களையும் செய்திகளையும் இவைபோன்ற பலவற்றையும் வழங்குகின்றன. இவற்றிலெல்லாம் மொழியானது முதன்மை இடத்தைப் பெறுகின்றது.




மொழியுடன் கூடியே மனிதனின் விளங்கிக்கொள்ளும் ஆற்றலும் தொடர்புறுத்தல் ஒழுங்கும் வளர்கின்றன. இவை மொழிக்கும் தொடர்புறுத்தலுக்கும் இடையிலுள்ள பிணைப்பினை நன்கு காட்டுகின்றன.

தொடர்புறுத்தும் ஆற்றல் சம்பந்தப்பட்ட வரையில் ஆரம்ப பாடசாலையின் பொறுப்பு மிகப் பெரியது. பிள்ளை தன் வீட்டில் கேட்பதன் மூலமும் பேசுவதன் மூலமும் சில அனுபவங்களைத் திரட்டிய போதிலும் அவற்றிற்கான திறன்களை வளர்ப்பது ஆரம்ப பாடசாலையின் கடமையாகும். வாசிப்பிலும் எழுத்திலும் பிள்ளைகளுக்குத் தகுந்த வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் இவ்வளர்ச்சியைச் சிறப்பாக ஏற்படுத்தலாம்.

மேலே காட்டியவற்றிலிருந்து மொழியானது மிகவும் ஆற்றலும், முதன்மையும், இன்றியமையாத கருத்துமாற்று அல்லது தொடர்புறுத்தும் ஊடகம் என்பது தெளிவு.


## செவ்வை பார்த்தல் 3

புராதன மக்களால் கையாளப்பட்ட குறியீடுகளின் பட்டியல் கீழே தரப்படுகின்றது. இக்குறியீடுகள் தொடர்புபடுத்தும் கருத்துக்களை விளக்குக.

1 குறுந்தாட்பூதம் ( **Dwarf** ) (குள்ளன்)
2 சூரியசந்திரர்.
3 வெண்கொற்றக்குடை
4 சித்திர அலங்காரப் படிக்கற்கள் (வட்டக்கல்)
(தாமரை, அர்த்தசந்திரன் முதலியன)

5 நாகம்.
6 நிறைகுடம்.
7 குத்துவிளக்கு.
8 (பிரணவமந்திரம்) ஓம்.
9 நெற்கதிர்.
10 எருது, காராம்பசு.

பின்வரும் சதுரங்களில் தரப்பட்டுள்ள குறியீடுகளை விளக்குக.




இம் மொடியூலின் இறுதியிலே தரப்பட்ட விடைகளோடு ஒப்பிட்டறிக.

## செயற்பாடு 3

பின்வரும் இடங்களுக்குச் சுற்றுலாச் செல்ல உமது மாணவரோடு ஒழுங்கு செய்க.

பண்ணை அல்லது கமம்.
தொழிற்சாலை
புகையிரத நிலையம்
அஞ்சலகம்
கிராம சேவகர் அலுவலகம்
கோயில்

- மேற்கூறிய இடங்களில் பொறுப்பான உத்தியோகத்தர்களோடு கலந்துரையாட உமது மாணவரை நெறிப்படுத்துக.
- வகுப்பில் மாணவர் பெற்ற தகவல்கள்பற்றிக் கலந்துரையாடுக.
- மாணவரின் கருத்து வெளிப்பாட்டினைத் தூண்டவல்ல சில செயற்பாடுகளை முயன்று செயற்படுத்துக.

## 5.0 சிந்தனையின் சிறந்த கருவி மொழியாகும்

மொழியின்றிச் சிந்திக்க முடியாது. உதாரணமுகத்தால் இவற்றை அறியலாம். சுற்றுடலில் உயிரினங்கள், மரங்கள் போல்வன காணப்படும். பறவையின் படம் பிள்ளையிடம் ஒரு உருவத்தை ஏற்படுத்தும். இது புலனால் வரும் காட்சியாகும். இந்தக் காட்சி மீண்டும் மீண்டும் ஏற்படுவதால் பறவையைப் பற்றிய ஒரு பூரணமானதக் காட்சி மனத்தில் ஏற்படும். பறவை என்ற சொல்லைக் கூறியவுடன், பிள்ளை அப்போது பறவையைக் காணாவிடினும், பறவை பற்றிய எண்ணக்கரு மனதிலே ஏற்படுகிறது. இந்த நிகழ்வு எப்படி ஏற்படுகிறது என்பதைப் பின்வரும் படங்கள் காட்டுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற்படி | படம் | → | காட்சி | → | மனக்காட்சி |
| இரண்டாம் படி | படம்<br>சொல் | → | மனப்படம்<br>சொல் | → | சொற்களைப் பயன்படுத்தல் |
| மூன்றும் படி | சொல் | → | எண்ணக்கரு | → | சிந்தனை |

மேலேயுள்ளவை படமூலம் விளக்கப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற்படி |  படம் | → | காட்சி | → | மரத்தின் மனக்காட்சி |
| இரண்டாம்படி |  + மரம் சொல் | → | மரத்தின் மனப்படம் + சொல் | → | சொல் (மரம்) |
| மூன்றும்படி | மரம் | → | மரம்பற்றிய எண்ணக்கரு | → | சொல்மூலமான சிந்தனை |

சிந்தனை, நுண்மதியின் செயற்பாடாகும். நுண்மதியையும் சிந்தனையையும் தொடர்புபடுத்துவது மொழியாகும். மொழியின்றிச் சிந்தனையில்லை.

சுற்றுடலை நன்கு அவதானிக்கும் பிள்ளை பாவனை மூலம் சுற்றுடலில் உள்ள பொருள்களின் பெயர்களை அறியும். இது ஒரு முறையில் அமைகிறது. பிள்ளையிடம் ஏற்படும் மொழிவளர்ச்சியோடு சிந்தனா சக்தியும் வளர்கிறது.

ஆரம்பத்தில் காட்சிப் பொருள்கள் மூலமே பிள்ளையிடம் சிந்தனை ஏற்படுகிறது. பிள்ளை தனது வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் காட்சிப் பொருள் இன்றியும் சிந்திக்கத் தொடங்கும். நேர்மை, கருணை, சனநாயகம் போன்ற கருத்துப் பொருட்களின் தெளிவு மொழி விருத்தியாலேயே ஏற்படுகிறது. சிந்தனையின் அத்திவாரம் மொழி. ஆரம்ப வகுப்புகளில் தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் சிந்தனாசக்தியை வளர்க்கும் வகையில் செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

## செயற்பாடு 4

ஆரம்ப வகுப்புக்களில் மாணவரின் எண்ணக்கருக்களை வளர்க்க மொழியின் செயற்பாடுகளை எவ்வாறு அளித்து, அளவிடலாம் என்பதைக் கீழ்க்காணும் செயற்பாடுகள் மூலம் அளவிட்டறியுங்கள்.

- படங்களையும் சொற்களையும் இணைத்தல்.

நீங்கள் கற்பிக்கும் வகுப்புக்கேற்பப் பூ, மரம், மாலை போன்றவற்றின் 10 படங்களை வைத்துக் கொள்ளுங்கள். அவற்றைக் குறிக்கும் சொற்கள் உள்ள அட்டைகளை வேறாக வைத்துக் கொள்க. (செ. மீ. 10 × 15 அளவு போதியதாகும்) வகுப்பை இரு குழுக்களாகப் பிரித்து, ஒரு குழுவிடம் படங்களையும், மற்றக் குழுவிடம் சொல்லட்டைகளையும் கொடுத்து, ஒரு குழு படம் காட்ட, மற்றக் குழுவினர் அதற்கான சொல்லட்டையைக் காட்டல். இச்செயற்பாட்டைத் திரும்பத் திரும்ப மாறி மாறி, விளையாட்டு முறையிலே செய்க.

- படம் பார்த்துக் கதை கூறல்
- வகுப்புக்கேற்ற, சந்தர்ப்பங்களை விளக்கும் சில படங்களைத் தயார் செய்தல்.

  உதாரணம்:- காகமும், நரியும். பிள்ளைகளிடத்திருந்து கதையைப் பெறும் வகையில் படங்களை ஒழுங்குபடுத்தல். அப்படங்கள் மூலம், பிள்ளைகள் கதை கூற வழிவகுத்தல்.

- கதையாக்கம்.
  - எனக்கு இறகு முளைத்தால்
  - தென்னை மரம் பேசினால்
  - நான் மீனாக இருந்தால்

இவைபோன்ற தலையங்கங்களைக் கொடுத்து மாணவரின் பேச்சு மொழிக்கு வழிவகுத்தல்.

## 6.0 மொழி பண்பாட்டினை வெளிப்படுத்தும்

மாண்ட வாழ்க்கைப் பாங்குகளின் கூட்டுத் திரட்சியே பண்பாடாகும். மரபுகள், உடைகள், மொழி என்பன இப்பண்பாட்டின் சில கூறுகள். சமூக அமைப்பின் இயல்பினைப் பண்பாடு வெளிப்படுத்த வல்லது.

பழங்கால மனித சமூகத்தின் பண்பாடு, வளர்ச்சி பெற்றதாய் இருக்கவில்லை. மாணிடவியலார் பண்பாட்டு வரட்சிக்கு வளர்ச்சியடையாத மொழியே காரணம் எனக் குறிப்பர். இதிலிருந்து ஒரு நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியில் **மொழியின் செல்வாக்கே** அதிகம் என்பது புலனாகின்றது. சிறந்த இலக்கியத்தோடு இணையும் பொழுதுதான் மொழி வளர்கின்றது. வளர்ச்சி பெற்ற எந்தச் சமூகமும் இலக்கிய வளமும் பொருந்தியதாகவே விளங்கும். மொசப்பத்தேமியா, எகிப்து, கிரேக்கம், ரோம் ஆகிய நாடுகளின் உன்னதப் பண்பாட்டிற்கு அந்நாடுகளின் சமூகங்களிடையே ஆக்கம் பெற்ற பேரிலக்கியங்களே காரணம் என அறிஞர்கள் கொள்வர். இன்று கூட எநத நாடு பேரிலக்கியத்தைத் தன்னிடத்தே கொண்டுள்ளதோ அந்த நாடே சிறந்த நாடாகக் கருதப்படுகின்றது. இவ்வுண்மை எமது நாட்டிற்கும் பொருந்தும். இவை யாவும் 'மொழியானது பண்பாட்டின் கண்ணாடி' என்பதையே புலப்படுத்துகின்றன.

அறிவையும் மனப்பாங்கையும் செயற்றிறன்களையும் வழங்குவதோடு மொழியின் செயற்பாடு முடிந்துவிடுவதில்லை. அது அவற்றைப் பேணியும், புதுக்கியும் பணிபுரிவதுமாகும். எந்தவொரு சமூகத்தினதும் ஒழுங்கமைந்த விழுமியங்களைப் பேணுவதும், எதிர்கால பரம்பரையினருக்கு அவற்றை வழங்குவதும் மொழியால் நிகழ்கின்றன. சமுதாயத்தின் ஆன்மீகம் சார்ந்தனவும் இலௌகீகம் சார்ந்தனவுமான வளர்ச்சியும் மொழியிலேயே தங்கியுள்ளது. எனவே மொழி என்பது 'பண்பாட்டுக்காவி' என அழைக்கப்படுகின்றது.
மொழியானது பண்பாட்டின் அடையாளமாய் மட்டுமன்றித் தேசிய மூலவளமாகவும் விளங்குகிறது.

மொழி கற்பிக்கும் ஆசிரியர் என்ற வகையில் மொழியின் பண்பாட்டம்சங்களை விளங்கிக்கொண்டு அவற்றினை வளர்த்திடும் வகையில் உமது பாடங்களை அமைத்துக் கொள்வது பொருத்தமானது.

## 7.0 பொழிப்பு

மேலே நாம் ஆராய்ந்தவற்றின் தொகுப்புரையைப் பின்வருமாறு தருகின்றோம்.

**மொழி என்பது கருத்துள்ள ஒலிகளதும் வடிவங்களதும் ஒழுங்கமைப்பாகும்.**

**மனித வரலாற்றின் கண்டுபிடிப்புக்களில் தலைசிறந்த கண்டுபிடிப்பு மொழியாகும்.**

**மொழி வெகுசனத் தொடர்புபடுத்தல், சிந்தித்தல் போன்ற உளச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் ஊடகமாகும்.**

**மொழி மக்களில் எந்த ஒரு பிரிவினரினதும் பண்பாட்டைப் புலப்படுத்துவதோடு அவர்களின் வெற்றிகள் வாழ்க்கைப் பெறுபேறுகள் ஆகியவற்றை எதிர்காலச் சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுக்கும் முக்கிய கருவியுமாக விளங்குகிறது.**

## 8.0 பிற் சோதனை

பொருத்தமான சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.

1 மொழி என்பது ஒழுங்கமைக்கப்பட்ட ..................... அமைப்பாகும்.

2 .......................................மட்டுமே மொழியைப் பேசும் திறனுடையவன்.

3 ....................................கருத்துத் தொடர்புறுத்தலின் மிகச் சிறந்த ஊடகம்.

4 தொலைக்காட்சி...................................... சாதனமாகும்.

5 மொழியானது சிந்தனையின்........................................

6 மொழியியலார் அன்பு, சனநாயகம் எனபவற்றைக் ..............................................என்பர்.

7 ..........................................................வளர்ச்சியோடு ஒரு பிள்ளை தனது சிந்தனையாற்றலையும் வளர்க்கின்றது.

8 ..................................................ஆரம்ப பாடசாலை வகுப்புக் கற்பித்தல்களில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

9 முன்னேற்றமடையாத ............................................ மொழியாற்றலும் முன்னேற்றம் அடையாததாக இருக்கும்.

10 மொழியைக் கற்பது ஏனைய பாடங்களைக் கற்பதற்கு ................ ...................................

முதல் வரிசையில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான தனித் தனி விளக்கத்தை இரண்டாவது வரிசையில் தெரிவு செய்து, உரிய எண்களைப் பொருத்தமான கூட்டுக்குள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 11 | பண்பாடு ( ) | 11 | பல்வேறு அனுபவங்களால் ஏற்படும் எண்ண முடிவு. |
| 12 | எண்ணக்கரு ( ) | 12 | ஏதாவதொன்றைச் சுட்டிக் காட்டும் அடையாளம். |
| 13 | புலக்காட்சி ( ) | 13 | வாழ்க்கைக் கோலத்தின் தொகுப்பு |
| 14 | காட்சிப் பொருள் ( ) | 14 | ஐம்புலன்கள் புலப்படுத்துவது |
| 15 | குறியீடு ( ) | 15 | தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, முதலியன. |
| 16 | வெகுசனத் தொடர்புச் சாதனம் ( ) | 16 | யோசித்து முடிவு காணல் |
| 17 | சைகை ( ) | 17 | மனதிலே ஏற்படும் உருவகம் |
| 18 | சிந்தனை ( ) | 18 | மனிதனின் முதல் மொழி |
| 19 | கற்பனை ( ) | 19 | வெளிப்படத் தோன்றும் பொருள் |
| 20 | அபிநயம் ( ) | 20 | முகபாவனை மூலம் தொடர்பு கொளல், கருத்து வெளிப் படுத்தல் |

இம்மொடியூலின் பின்னே தரப்பட்ட சரியான விடைகளோடு உமது விடைகளை ஒப்பிட்டறிக. விடைகள் பிழைத்தால், மீண்டும் இப்பகுதியை வாசித்துத் திருத்துக.

> இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றிகரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.

## 9.0 ஒப்படை

ஒன்றை மட்டும் தெரிவு செய்க.

(1) மொழியின் இயல்பைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் விளக்குக.

(அ) மொழி ஒரு கருத்துப் பொருள்
(ஆ) ஒலியும் மொழியும்
(இ) சிந்தனை வளர்ச்சிக் கருவியாக மொழி
(ஈ) மொழி ஒரு பண்பாட்டுக் காவி

விடையை 350 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.

(2) ''மொழி ஒரு தொடர்புறுத்தல் சாதனம்'' எனும் பொருள் பற்றி 300 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை வரைக.

## 10.0 உசாத்துணை நூல்கள்


- மொழி நூல் - டாக்டர். மு. வரதராசன்
- ஆசிரியர்க்கான கைந்நூல்- 6 ஆம் வகுப்பு
- மொழியியல் - டாக்டர். ஸ்ரீனிவாசன்
- இலக்கணத் தெளிவு - "சொக்கன்"
- மொழியின் கதை - டாக்டர். மு. வரதராசன்
- சொல்லின் கதை - டாக்டர். மு. வரதராசன்
- எழுத்தின் கதை - டாக்டர். மு. வரதராசன்


## 11.0 விடைகள்

செவ்வை பார்த்தல்

| | | | |
|---|---|---|---|
| 1 | ✓ | 7 | ✓ |
| 2 | ✓ | 8 | ✓ |
| 3 | ✓ | 9 | ✓ |
| 4 | ✓ | 10 | ✓ |
| 5 | ✗ | 11 | ✓ |
| 6 | ✓ | 12 | ✓ |

## செயற்பாடு - 2

1 பாலம்

2 ஆசிரியர்

3 தாய்மொழி

4 நுவரெலியா

5 விவசாயம்

6 நாலு மொழித் திறன்கள் - கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகும்.

7 முன்னேற்றமடைந்த மக்களிடையே பேச்சு மொழி, எழுத்து மொழி என்ற இரண்டும் உண்டு.

8 மொழி கற்பித்தலுக்குச் சிறந்த கருவி ஆகும்.

9 பல்வேறு இனங்கள் இருப்பதால் பல்வேறு மொழிகள் பேசுபவர் உளர்.

10 சில ஒலிகளுக்குக் கருத்து நீண்டகாலப் பாவனையால் ஏற்பட்டது.

## செவ்வை பார்த்தல் - 2

| | | | |
|---|---|---|---|
| 1 | ☑ | 6 | ☑ |
| 2 | ☑ | 7 | ☒ |
| 3 | ☑ | 8 | ☑ |
| 4 | ☑ | 9 | ☑ |
| 5 | ☑ | 10 | ☑ |

## செவ்வைபார்த்தல் - 3

1 பாதுகாப்பு

2 நீண்டகாலம் இருப்பது

3 அதிர்ஷ்டம்

4 உண்மைக் கருத்துக்கள் (பௌத்தம்)

5 நிரந்தரமாய் நீர்பெறுதல்.

6 சௌபாக்கியம்

7 ஞானம்

8 தார்மீக வாழ்க்கை

9 சுபீட்சம்

10 துர்ப் பலன்கள்

11 அமைதி

12 முதலுதவிச் சேவை

13 அருகிலே பாடசாலை உண்டு.

14 நான்காவது மைலில்
**10ஆவது** மதகு

15 தூரம் 3 கி. மீ.

16 புகைவண்டிக் கடவை.

17 விளையாட்டுப் போட்டிகள். சர்வதேச ஒத்துழைப்பு

18 வீதியில் இரண்டு வளைவுண்டு

19 விஷம்

20 பஸ்தரிப்பு.

பிற் சோதனை

1 ஒலி, வரிவடிவங்களின்
2 மனிதன்
3 மொழியே
4 வெகுசனத் தொடர்பு
5 வெளிப்பாடு
6 கருத்துநிலை எண்ணக்கரு
7 மொழி
8 கட்புல செவிப்புலச் சாதனங்கள்
9 பண்பாட்டில்
10 அத்தியாவசியமாகும்
11 (13)
12 (11)
13 (14)
14 (19)
15 (12)
16 (15)
17 (18)
18 (16)
19 (17)
20 (20)

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.